# தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை

## மானியக் கோரிக்கை எண் - 46

## அறிவிப்புகள்

## 2014–2015

**கே.சி. வீரமணி**
பள்ளிக்கல்வித் துறை அமைச்சர்

# தமிழ் வளர்ச்சித் துறை

## அறிவிப்புகள்

## 2014–2015

### 1) தமிழ் விருதாளர்களுக்கு பேருந்துப் பயணச் சலுகை

தமிழ்ப் பணிதான் தன் வாழ்நாளின் தலையாய பணி எனத் தமிழுக்காக உழைத்த அறிஞர் பெருமக்களுக்குத் தமிழக அரசு தமிழ் வளர்ச்சித் துறையின் வாயிலாக விருதுகள் வழங்கிச் சிறப்பித்து வருகிறது. இவ்வாறு விருது பெற்ற தமிழறிஞர்களுக்கு மேலும் சிறப்பு சேர்க்கும் வகையில் **மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின்** ஆணைப்படி, தமிழ்நாடு முழுவதும் அரசுப் பேருந்துகளில் கட்டணமில்லாப் பயணச் சலுகை வழங்கப்படும்.

### 2) தமிழறிஞர்களுக்கான மருத்துவப் படியை உயர்த்துதல்

தாய்த் தமிழகத்தின் எல்லையைக் காத்த எல்லைக் காவலர்களுக்கும் தமிழறிஞர்களுக்கும் மரபுரிமையர்களுக்கும் தமிழக அரசால் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. **மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** இவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மருத்துவப்படி 15 ரூபாயிலிருந்து 100 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். மேலும், இதுவரை மருத்துவப்படி வழங்கப்படாத அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கும் ஏற்கெனவே திங்கள்தோறும் வழங்கப்பட்டுவரும் உதவித் தொகையான ரூ.2,000–த்துடன் மருத்துவப்படி 100 ரூபாய் வழங்கப்படும்.

**3) ‘‘அயல்நாடுகளில் தமிழ் கற்பதில் உள்ள இடர்ப்பாடுகள்’’ – கருத்தரங்கு**

அயல்நாடுகளில் வாழும் தமிழர்கள், குறிப்பாக மாணவர்கள், தமிழ் கற்பதில் எதிர்நோக்கும் இடர்ப்பாடுகளைக் களைய **மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** உலகத் தமிழ்ச் சங்கம் வாயிலாக சிங்கப்பூர், மலேசியா ஆகிய இரு நாடுகளில் கருத்தரங்குகள் நடத்தப்படும்.

**4) பன்னாட்டுத் திருக்குறள் மாநாடு**

“திருக்குறள் மனித இனத்தை நெறிப்படுத்தும். காலத்தை வென்ற அறிவுக் கருவூலம்’’ **என்ற மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அமுதமொழிக்கேற்ப,** திருக்குறளின் பெருமையைப் பறைசாற்றும் வகையில் உலகளாவிய அறிஞர்களும் குறள்நெறி ஆய்வாளர்களும் தமிழறிஞர்களும் பங்கேற்கும் பன்னாட்டுத் திருக்குறள் மாநாட்டினை உலகத் தமிழ்ச் சங்கமும் சென்னைப் பல்கலைக்கழகமும் இணைந்து நடத்தும்.

**5) பேரகரமுதலியை எண்மப்படுத்துதல்**

தமிழ் மொழிதான் உலகத்தின் மூத்த மொழி என்ற சொல்லிற்குக் காரணமாக இருப்பது தமிழின் வேர்ச்சொற்களாகும். வேர்ச்சொற்களை ஆய்வு செய்வதற்காக உருவாக்கப்பட்ட அகர முதலித் திட்ட இயக்ககம், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலியின் 13,327 பக்கங்கள் அடங்கிய 31 தொகுதிகளைக் கொண்ட நூல்களை வெளியிட்டுள்ளது. **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** இம்முப்பத்தொரு தொகுதிகளும் எண்மப்படுத்தப் பெற்று (digitize) தமிழ் வளர்ச்சித் துறையின் வலைத்தளத்தில் வெளியிடப்பெறும்.

**கே.சி. வீரமணி**
பள்ளிக்கல்வித் துறை அமைச்சர்